**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண் : 204/2015**

**அ.சா. : 6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜா (எ) திருப்பதி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னசாமி |
| ஊர் | : | திருவயலூர் |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 45 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.20.12.2022**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் தற்போது திருவயலுரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். கடந்த 23.08.2015 ஆம் தேதி பகல் 12.30 மணியளவில் நான் காவாக்கரை அருகே ஆடு மேய்த்துக்கொண்டிருந்தபோது அதற்கு முந்தைய நாள் அ.சா.1 ன் ஆடு திருடு போனது சம்மந்தமாக போலீசார் அங்கு வந்து ஆடு திருடு போன இடத்தில் படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடமும், செல்வகுமார், த.பெ.சக்கரவர்த்தி என்பவரிடமும் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது ஆகும். பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். அ.சா.1 உடன் நான் காவல் நிலையம் செல்லவில்லை. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுதது செய்து விட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவர்

கேட்டுக்கொண்டதற்கு இணங்க தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(2,3 எதிரிகள் 1 வது எதிரியின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள். )

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி.எண் : 204/2015**

**அ.சா. : 7**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ராமு |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னராஜ் |
| ஊர் | : | தருமபுரி |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| மதம் | : | |
| வயது | : | 61 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள்.20.12.2022**

**முதல் விசாரணை:**

1) நான் பாரூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஒய்வு பெற்றேன். கடந்த 23.08.2015 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது போச்சம்பள்ளி கோனனூர் ஏரி காவாக்கரையை சேர்ந்த சுப்ரமணிய கவுண்டர் மகன் ராமமூர்த்தி என்பவர் எதிரி முனீஸ்வரன்., த.பெ. குணசேகரன் , முல்லை நகர் போச்சம்பள்ளி மற்றும் மகாலிங்கம் த.பெ. மாதேஸ்வரன், புளியாண்டப்பட்டி ஆகிய இவர்களை Honda Shine TN -24 AC 5377 என்ற இரு சக்கர வாகனத்தையும், ஒரு பெட்டை வெள்ளாடும் இவைகளுடன் நிலையம் வந்து ஆஜர்படுத்தி எழுத்துமூலமான புகாரை கொடுத்ததின் பேரில் போச்சம்பள்ளி காவல் நிலைய குற்ற எண். 515/2015, ச.பி. 379 இதசவின் படி வழக்கு பதிவு செய்து அன்று 11.30 மணிக்கு சாட்சிகள் பெரியண்ணன் மற்றும் குமரேசன் ஆகியோர் முன்னிலையில் எதிரி முனீஸ்வரன் மற்றும் மகாலிங்கம் ஆகியோர்களை விசாரித்து எதிரி முனீஸ்வரன் தானாக முன் வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி போச்சம்பள்ளி காவல் நிலையம் முன்னால் வைத்து வழக்கு சொத்தான வெள்ளாடு ஒன்றையும், இரு சக்கர வாகனத்தையும் படிவம் 95 மூலம்

கைப்பற்றினேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 95 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (TN24AC5377 ,இரு சக்கர வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

எதிரிகள் முனீஸ்வரன் மற்றும் மகாலிங்கம் ஆகியோர்களை கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அன்றைய தினமே 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வகுமார், ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், **வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் தலைமறைவு எதிரி முத்துவேல் என்பவரை கைது செய்ய கோனானூர், குள்ளனூர், வடமலம்பட்டி ஆகிய இடங்களில் தேடியும் கிடைக்காததால் தக்க புலன் வைத்து வந்தோம்.

பின்னர் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திருமதி. விஜயா அவர்களின் பார்வைக்கு வைத்தேன். மேற்படி வழக்கை உதவி ஆய்வாளர் தொடர்ந்து புலன் விசாரணை செய்தார். 25.08.2015 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு போச்சம்பள்ளி காவல் நிலையம் திருமதி விஜயா அவர்கள் ரோந்து சென்ற போது போச்சம்பள்ளி - கல்லாவி ரோடில் பழைய போச்சம்பள்ளி செல்லும் பிரிவு ரோட்டில் நின்றிருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மணிவேல் (எ) முத்துவேல், த. பெ. சின்னண்ணன் என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரிக்கையில் இவ்வழக்கில் ஆடு திருடிய சம்பவத்தில் தான் சம்மந்தப்பட்டதாக கூறியதின் பேரில் கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

25.08.2015 ஆம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். வழக்கு குறித்து காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். காவல் உதவி ஆய்வாளர் திருமதி. விஜயா என்பவர் இறந்துவிட்டார்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆடு திருடு போனதாக சொல்லப்படும் அன்று இரவு தனிப்பட்ட புகார் எதுவும் நிலையத்தில் அ.சா.1 எதுவும் கொடுக்கவில்லை. அ.சா.1 கொடுத்த புகாரில் திருடு போன ஆடு ஆண் ஆடா, பெண் ஆடா மற்றும் ஆட்டின் அடையாளம் எதுவும் குறிப்பிட்டு புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. வெள்ளாடு ஒன்று காணவில்லை என்றுதான் கொடுத்தார். அ.சா.1 புகார் கொடுக்கும்போது வழக்கின் சொத்தான ஆடு, இரு சக்கர வாகனம், எதிரிகள், சாட்சிகளாக குறிப்பிட்டுள்ள பெரியண்ணன் மற்றும் குமரேசன் ஆகியோர்களை ஆஜர்படுத்தினாரா என்றால் ஆஜர்படுத்தினார்கள்.

புகார் மற்றும் எதிரிகளை காலை 10.30 மணிக்கு ஆஜர்படுத்தினோம். சாட்சிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தை எவ்வளவு நேரம் தயாரித்தேன் என்றால் 11.30 மணிக்கு ஆரம்பித்தேன்.10.30 மணி முதல் 11.30 வரை எதிரிகள் என்னுடைய பொறுப்பில் இருந்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய கட்டுப்பாட்டில் எதிரிகள் இருந்ததால் வழக்கிற்கு சாதகமாக ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் நிலையத்திற்கு முன்னால் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்று சொன்னால்ச ரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் வழக்கிற்காக என்னால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. புகாரில் 23.08.2015 ஆம் தேதி காலை 06.00 மணியளவில் எதிரிகளையும், ஆட்டையும் பிடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரிகளை போச்சம்பள்ளி சந்தூர் சாலை வாரச்சந்தை, நுழைவு வாயிலில் வைத்து பிடித்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சந்தையானது பெரிய சந்தை என்றால் சரிதான். மேற்படி சந்தைக்கு அதிகப்படியான மக்கள் கூட்டம் வருவார்கள் என்றால் சரிதான். பாதுகாப்பிற்காக காவலர்கள் சந்தைக்குப் போடப்படுவார்கள் என்றால் சரிதான்.

போச்சம்பள்ளி நான்கு ரோட்டில் சந்தை முடியும் வரை போலீசார் பிக்கப்பிங்(ரோந்து பணி) செய்வார்கள் என்றால் சரிதான். நுழைவு வாயிலிருந்து நான்கு ரோடு சுமார் அரை பர்லாங்கு இருக்கும் என்றால் சரிதான். அங்கிருந்து காவல் நிலையம் ஒரு பர்லாங்கு தூரம் இருக்கும் என்றால் சரிதான். சந்தைக்கு சந்தூர் ரோடு வழியாக இரண்டு நுழைவு வாயில்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு நுழைவு வாயில்களும் ஒரு நுழைவு வாயிலிருந்து மற்றொரு நுழைவு வாயிலுக்கு சுமார் 20 அடி

தூரம் இருக்கும். இரண்டு நுழைவு வாயிலிருந்து எந்த நுழைவு வாயிலில் பிடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் எதிரிகளை எந்த நுழைவு வாயிலில் பிடித்தார்கள் என்று விசாரணை செய்து பிடித்த நுழைவு வாயிலுக்கு சென்று எதிரிகளை பிடித்தது குறித்து விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்யவில்லை. புகாரில் குறிப்பிட்ட நபர்களை தவிர வேறு தனிநபர்களை வழக்கு குறித்து விசாரணை செய்தேனா என்றால் அருண்ராஜ், கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரணை செய்தேன். அருண்ராஜ் என்பவர் அ.சா.1 ன் மகன் என்றால் சரிதான்.

கோவிந்தராஜ் என்பவர் அ.சா.1 ன் நண்பர் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வேறு யாராவது தனி நபர்களை விசாரணை செய்தால் சம்பவம் நடைபெறவில்லை என்று தெரிந்துவிடும் என்பதற்கா வேறு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் விஜயா அவர்கள் 1 ஆம் எதிரியை கைது செய்ய செல்லும்போது நான் உடன் செல்லவில்லை. எனக்கு அதைப்பற்றி நேரடியாக தெரியாது எப்போது கைது செய்தார், எங்கு கைது செய்தார், என்ன வாக்குமூலம் கொடுத்தார் போன்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், அ.சா1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) கைப்பற்றப்பட்ட சொத்தை எப்போது நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றால் அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டேன். நீதிமன்றத்தில் வழக்கு சொத்தானது ஒப்படைக்கப்படவில்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு 10 நாட்கள் கழித்து படிவம் 95 நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான விளக்கம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சந்தை கேட்டிலிருந்து நிலையத்திற்கு வருவதற்கு 5 அல்லது 10 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். காலை 06.00 மணிமுதல் 10.30 வரை எதிரிகள், கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சொத்து யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால் புகார்தாரர் மற்றும் அவர் சார்ந்த நபர்கள் பொறுப்பில் இருந்தது. 10 நிமிடத்தில் ஒப்படைக்கவேண்டிய பொருட்களையும் எதிரிகளையும் ஏன் காலதாமதமாக ஒப்படைத்தார்கள் என்று நான் விசாரணை மேற்கொண்டேனா என்றால்

மேற்கொண்டேன்.

2) எதிரிகள் தப்பி ஓடி விட்டதால் அவர்களை திரும்ப பிடிக்கவும், வழக்கு சொத்தை பாதுகாக்கவும் காலதாமதம் ஏற்பட்டதாக தெரியவந்தது. என்னிடம் கொடுத்த புகாரில் மேற்படி சங்கதிகளை பொறுத்து குறிப்பிட்டுள்ளாகளா என்றால் வண்டி ஓட்டிய நபர் தப்பி ஓடி விட்டதாக மட்டும் குறிப்பிட்டுள்ளார்கள்.

3)ிட்டியை ஓட்ட நபர் யார் என்று புகாரில் குறிப்பிடப்படவில்லை. புகாரில் வண்டியை ஓட்டிய நபர் இடைச்சொறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் சந்தை கேட்டில் பிடித்ததாக சொல்லப்பட்டுள்ள சங்கதி சாட்சிகள் எதிரிகளை வேறு இடத்தில் பிடித்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். ஆடு ராமமூர்த்தி என்பவரின் ஆடு என்பதை எவ்வாற முடிவு செய்தேன் என்றால் விசாரணை செய்து முடிவு செய்தேன். அதற்கு ஆதாரம் எதுவும் அவர் கொடுக்கவில்லை. மேற்படி சந்தைக்கு வியாபாரத்திற்காக செல்லும் நபர்கள் சந்தூர் ரோடு வழியாக உள்ள நுழைவு வாயிலில் சென்றால் பணம் கட்டி செல்லவேண்டும் என்றால் சரிதான்.

எதிரிகள் சந்தைக்குள் ஆடு வியாபாரம் செய்வதற்காக பணம் கட்டி சென்றார்களா என்றால் அது பற்றி வாய்மொழியாக விசாரணை செய்தேன். எழுத்துமூலமாக பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரம், நாளில் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நாள் நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. தனிநபர் சாட்சிகள் நிலையத்தில் கையிருப்பு சாட்சிகள் என்றால் சரியல்ல. அ.சா.1 தவறான நபர்களை குறிப்பிட்டு புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.